பிரஸார்பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4

30 06 2024 **SUNDAY** **6.30 PM**

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. நாட்டின் சுதந்திரப் போராட்டத்திலும், வளர்ச்சிப்பணிகளிலும் பழங்குடியின மக்களின் பங்களிப்பு மகத்தானது என்று பிரதமர் திரு நரேந்திர மோடி தமது மன்கிபாத் உரையில் குறிப்பிட்டுள்ளார்.

2. கள்ளக்குறிச்சி கள்ளச்சாராய உயிரிழப்புக்கு மாநில அரசு பொறுப்பேற்க வேண்டும் என்று மத்திய தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் கூறியுள்ளார்.

3. தமிழகத்தில் கடந்த மூன்றாண்டுகளில் 77 நீதிமன்றங்கள் திறக்கப்பட்டுள்ளதாக சட்டத்துறை அமைச்சர் திரு ரகுபதி தெரிவித்துள்ளார்.

4. புதிய குற்றவியல் நடைமுறை சட்டங்கள் நாளை அமலுக்கு வருகின்றன.

5. இந்தியாவுக்கு எதிரான மகளிர் டெஸ்ட் கிரிக்கெட் போட்டியின் இன்றைய ஆட்டநேர இறுதியில் தென்னாப்பிரிக்கா 2 விக்கெட் இழப்புக்கு, 232 ரன் எடுத்துள்ளது.

<u>*----இனி விரிவான செய்திகள்----*</u>

<<<<<<>>>>>>

மக்களவைத் தேர்தலில் ஜனநாயக கட்டமைப்பு மற்றும் அரசியல் சாசனத்தின்மீது உள்ள அசைக்க முடியாத நம்பிக்கையை மக்கள் மீண்டும் உறுதி செய்திருப்பதாக பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

அகில இந்திய வானொலியில் இன்று ஒலிபரப்பான மன்-கி-பாத் நிகழ்ச்சியில் நாட்டு மக்களிடையே உரையாற்றிய பிரதமர், 2024 பொதுத்தேர்தலில் 65 கோடி மக்கள் தங்கள் வாக்குகளை பதிவு செய்திருப்பது மகிழ்ச்சி அளிப்பதாக கூறினார்.

இந்த தேர்தலை வெற்றிகரமாக நடத்தி முடித்த தேர்தல் ஆணையத்துக்கும், நாட்டு மக்கள் ஒவ்வொருவருக்கும் தமது பாராட்டுகளையும், நன்றியையும் தெரிவிப்பதாக பிரதமர் குறிப்பிட்டார்.

சுதந்திர போராட்டக்காலத்தில் ஆங்கிலேயருக்கு எதிராக ஜார்கண்ட் மாநிலத்தை சேர்ந்த பழங்குடியின சகோதரர்கள் தீவிரமாக மேற்கொண்ட போராட்டத்தை நினைவுகூறும் வகையில் இன்றைய தினம் ஹூல் தினமாக கொண்டாடப்படுவதாக அவர் கூறினார்.

பழங்குடியின சகோதரர்கள் வீர் சித்து மற்றும் கான்ஹூ ஆகியோர் சந்தாளி மக்களை ஒருங்கிணைத்து போராடி நாட்டுக்காக தங்கள் இன்னுயிரை தியாகம் செய்ததையும் பிரதமர் நினைவு கூர்ந்தார்.

உலக சுற்றுச்சூழல் தினத்தன்று அன்னையின் பெயரில் ஒரு மரம் என்ற இயக்கத்தை தாம் தொடங்கியுள்ளதாக குறிப்பிட்ட பிரதமர், தாமும் தமது அன்னையின் பெயரில் மரத்தை நட்டதாக தெரிவித்தார்.

**Plant 4 Mother** என்ற **Hashtag** வாயிலாக சமூக வலைதளங்களில் மக்கள் பதிவிட்டு வருவதாக அவர் கூறினார்.

தாய் மண்ணை காக்க வேண்டும் என்ற உணர்வை மக்களிடையே விதைக்கும் ஒரு வாய்ப்பாக இதனை தாம் கருதுவதாகவும் பிரதமர் மோடி கூறினார்.

மனதின் குரல் நிகழ்ச்சி வாயிலாக மக்களோடு இணைந்து பயணிப்பது மகிழ்ச்சி அளிப்பதாக பிரதமர் தெரிவித்தார்.

வரும் நாட்களிலும் நாட்டின் வளமான கலாச்சாரம், வரலாறு மற்றும் வளர்ச்சிக்கான முயற்சிகள் குறித்த தகவல்களுடன் இந்நிகழ்ச்சி தொடரும் என்றும் பிரதமர் திரு நரேந்திர மோடி கூறினார்.

பிரதமர் ஆற்றிய உரையின் முழு தமிழாக்கம் சென்னை அகில இந்திய வானொலியில் இன்றிரவு 8 மணிக்கு மறுஒலிபரப்பு செய்யப்படுகிறது.

தமிழகம் மற்றும் புதுச்சேரியில் உள்ள அனைத்து வானொலி நிலையங்களும் இதனை அஞ்சல் செய்யும்.

**<<<<<<>>>>>>**

கள்ளக்குறிச்சி கள்ளச்சாராய சம்பவத்திற்கு தமிழக அரசே பொறுப்பேற்க வேண்டும் என்று தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் கூறியுள்ளார். இன்று சென்னையில் செய்தியாளர்களிடம் பேசுகையில் அவர் இவ்வாறு கூறினார்.

**<<<<<<>>>>>>**

நீதித்துறையில் பெண்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவது மகிழ்ச்சி அளிப்பதாக உச்சநீதிமன்ற நீதிபதி திரு சுந்தரேஷ் தெரிவித்துள்ளார்.

சேலத்தில் தனியார் சட்டக்கல்லூரி விழாவில் கலந்துகொண்ட அவர், சட்டம் பயிலும் பெண்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது என்றும், இன்னும் 20 ஆண்டுகளில் 70 சதவீதத்திற்கும் மேற்பட்ட பெண்கள் நீதித்துறையில் பணியாற்றுவார்கள் என்றும் கூறினார்.

குற்றங்களை தடுப்பதற்கான நடவடிக்கைகளை அரசு உறுதியுடன் மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

இணையதள குற்றங்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதாகவும், அதனை கட்டுப்படுத்த உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும் உச்சநீதிமன்ற நீதிபதி திரு சுந்தரேஷ் வலியுறுத்தினார்.

இந்நிகழ்ச்சியில் பேசிய மாநில சட்டத்துறை அமைச்சர் திரு ரகுபதி, சென்னை உயர்நீதிமன்றத்தின் பரிந்துரையை ஏற்று கடந்த மூன்றாண்டுகளில் 77 நீதிமன்றங்கள் திறக்கப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

வழக்குரைஞர்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப கூடுதலாக நீதிமன்றங்கள் திறக்கப்படும் என்றும் அவர் கூறினார். மாநில அரசு நீதித்துறைக்கு உறுதுணையாக இருக்கும் என்றும் அமைச்சர் திரு ரகுபதி கூறினார்.

<<<<<<>>>>>>

நாடு முழுவதும் புதிதாக கொண்டுவரப்பட்டுள்ள மூன்று குற்றவியல் நடைமுறை சட்டங்கள் நாளை அமலுக்கு வருகிறது.

பாரதிய நியாய சன்ஹிதா, பாரதிய நகஹரிக் சுரக்ஷ சன்ஹிதா, பாரதிய சாக்ஷ அதினியம் ஆகிய இந்த மூன்று குற்றவியல் நடைமுறை சட்டங்களையும் மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களில் நடைமுறைக்கு கொண்டுவருவதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் மத்திய அரசு மேற்கொண்டுள்ளது.

இந்த சட்டங்கள் குறித்த விழிப்புணர்வை அனைத்துத்தரப்பினரிடையேயும் ஏற்படுத்துவதற்கான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டது.

காவல்துறையினர் மற்றும் புலனாய்வு அமைப்பினர் இந்த சட்டங்களை திறம்பட கையாளுவதற்கான பயிற்சிகளும் வழங்கப்பட்டு வருகின்றன.

ஆகாஷவாணி மற்றும் தூர்தர்ஷன், சமூக வலைதளங்கள் மூலமாகவும் இந்த சட்டங்கள் குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு வருகிறது.

<<<<<<>>>>>>

*மாவட்டச் செய்திகள்*

நீலகிரி மாவட்டம் கூடலூர் மற்றும் பந்தலூர் பகுதிகளில் கனமழை காரணமாக முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளவர்களை மாநில அமைச்சர் திரு ராமச்சந்திரன் நேரில் சந்தித்து நிவாரணப்பொருட்களை வழங்கினார்.

----------------

மயிலாடுதுறை மாவட்டத்தில் ரயில்வே ஜங்ஷனுக்கு வந்த உரங்களை தஞ்சை, நாகை, திருவாரூர் மாவட்டங்களுக்கு லாரிகள் மூலம் தேவையான பகுதிகளுக்கு அனுப்பி வைக்கும் பணியினை மாவட்ட வேளாண் இணை இயக்குனர் திரு சேகர் பார்வையிட்டார்.

-----------

தருமபுரியில் ஆங்கிலேயர் காலத்து அதிகாரி சர் தாமஸ் மன்றோ நினைவுத்தூண் பழமை மாறாமல் புதுப்பிக்கப்பட்டு சிறிய பூங்கா அமைக்கப்பட்டுள்ளது.

---------------

புதுக்கோட்டை மாவட்டத்தில் காரி பருவத்தில் நெல், மக்காச்சோளம், நிலக்கடலை ஆகிய பயிர்கள் சாகுபடி மேற்கொள்ள அடுத்த மாதம் 31-ஆம் தேதி கடைசி நாள் என்றும், பிரதமரின் பயிர் காப்பீட்டுத் திட்டத்தின்கீழ், பதிவு செய்து விவசாயிகள் பயனடையலாம் என்றும் வேளாண்மைத்துறை அறிவித்துள்ளது.

--------------

தூத்துக்குடி மாவட்டம் கோவில்பட்டி கிருஷ்ணா நகரில் உள்ள உலகத்தரம் வாய்ந்த செயற்கை புல்வெளி ஹாக்கி மைதானத்தில் மாநில அளவிலான ஹாக்கி கோல்கீப்பர்களுக்கான பயிற்சி முகாம் இன்று நடைபெற்றது.

**<<<<<<>>>>>>**

*விளையாட்டுச் செய்திகள்*

இந்தியாவுக்கு எதிரான மகளிர் டெஸ்ட் கிரிக்கெட் போட்டியின் இரண்டாவது இன்னிங்சில் தென்னாப்பிரிக்கா ஆட்டநேர இறுதியில் 232 ரன் எடுத்துள்ளது.

சென்னையில் நடைபெற்று வரும் இப்போட்டியின் மூன்றாம் நாளான இன்று, 4 விக்கெட் இழப்புக்கு 236 ரன் என்ற நேற்றைய ஸ்கோருடன் முதல் இன்னிங்ஸை தொடர்ந்து ஆடிய தென்னாப்பிரிக்கா, 266 ரன்னுக்கு ஆட்டமிழந்து ஃபாலோஆனை பெற்றது.

இதனைத் தொடர்ந்து இரண்டாவது இன்னிங்ஸை ஆடி வரும் தென்னாப்பிரிக்கா இன்றைய ஆட்டநேர இறுதியில் 2 விக்கெட் இழப்புக்கு 232 ரன் எடுத்துள்ளது.

இந்தியா முதல் இன்னிங்ஸில் 6 விக்கெட் இழப்புக்கு 603 ரன் எடுத்திருந்த நிலையில் ஆட்டத்தை முடித்துக் கொள்வதாக அறிவித்தது.

---------

ஆசிய இளையோர் மல்யுத்த சாம்பியன் போட்டியின் மகளிர் பிரிவில் இந்தியா 6 தங்கம், 3 வெள்ளிப்பதக்கங்களை வென்றது.

**<<<<<<END>>>>>>**